பக்கங்கள் 14+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 18 வெள்ளிக்கிழமை 31.01.2025 | அதிர்வு 183

## வல்வெட்டித்துறையில் மக்களுடன் ஜனாதிபதி



(விரிவான செய்தி 4 ஆம் பக்கத்தில்)

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# மாவைக்கு நேரில் அநுர அஞ்சலி



(எஸ்.நிதர்ஷன்)

மறைந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேரில் அஞ்சலி செலுத்தினார்.

மாவை சேனாதிராஜாவின் புகழுடல் யாழ். மாவிட்டபுரத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

அவரது புகழுடலுக்கு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும், பொதுமக்களும் தொடர்ச்சியாக அஞ்சலி செலுத்தி வருகின்ற நிலையில், நாளைமறுதினம் ஞாயிற்றுக்குழமை இறுதிக்கிரியைகள் நடைபெறவுள்ளன. 04 ▶



# வடக்கு அபிவிருத்திக்குத் தரும் நிதியை செலவு செய்யாமல் ஏன் மீள அனுப்புகிறீர்?

## கேள்வி எழுப்பிய ஜனாதிபதி

## தடுமாறிய உயர் அதிகாரிகள்

(எஸ்.நிதர்ஷன்)

“வடக்கு மாகாண அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கப்படும்போது உரிய வகையில் செலவு செய்யாமல் மீண்டும் மத்திக்கு ஏன் அனுப்புகின்றீர்கள்?”

- இவ்வாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, அதிகாரிகளைப் பார்த்துக் கேள்வி எழுப்பினார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் இன்று நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கலந்துரையாடலின்போது வீதி அபிவிருத்தி அதிகார சபை விடயதானங்கள் தொடர்பில் நிதி வேண்டும் எனக் கோரிக்கை முன்வைத்த நிலையிலே ஜனாதிபதி மேற்கண்டவாறு கேள்வியை முன்வைத்திருந்தார். 04 ▶





# ஜனாதிபதியின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வடக்கு வேலையற்ற பட்டதாரிகள் போராட்டம்!

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் உள்ளிட்ட நிகழ்வில் கலந்துகொள்ள ஜனாதிபதி இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

மாவட்ட செயலகத்தில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி கலந்துகொண்டிருந்த வேளை, வேலையற்ற பட்டதாரிகள் மாவட்ட செயலகத்துக்கு அருகில் தமக்கு வேலைவாய்ப்பு கோரி கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்துக்குத் தடை விதிக்கக் கோரி யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் மனுத் தாக்கல் செய்திருந்த நிலையில், அமைதியாகப் போராட முடியும் எனவும், போராட்டத்துக்குத் தடை விதிக்க முடியாது எனவும் தெரிவித்த மன்று, தடை கோரிய மனுவை நிராகரித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.













# ஜனாதிபதி அநுரகுமார தலைமையில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இன்று காலை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு வகையான பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டன.

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர்கள்,

யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபன், திணைக்களத் தலைவர்கள், முப்படைகளின் பிரதிநிதிகள், பொலிஸ் உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், துறைசார் அதிகாரிகள் எனப் பலரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதியின் வருகையையொட்டி யாழ்ப்பாணம் மாவட்ட செயலக சுற்றுவட்டப் பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.















# வல்வெட்டித்துறையில் மக்களுடன் ஜனாதிபதி

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு இன்று வருகை தந்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, பிற்பகல் வல்வெட்டித்துறைக்குச் சென்று மக்களைச் சந்தித்தார். இதன்போது ஜனாதிபதி, பொதுமக்களுடன் செல்பி எடுத்தார். வயோதிபத் தாய்மார் ஜனாதிபதியைக் கட்டியணைத்து வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மாவைக்கு நேரில்...

இந்நிலையில், இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, மாவை சேனாதி ராஜாவின் இல்லத்துக்குச் சென்று அன்னாரின் புகழுடலுக்கு தனது அஞ்சலியைச் செலுத்தினார். அத்துடன் மாவை சேனாதி ராஜாவின் குடும்பத்தினருக்குத் தனது ஆறுதலையும் ஜனாதிபதி தெரிவித்தார்.









### வடக்கு அபிவிருத்திக்கு...

“மத்திய அரசால் வடக்கு மாகாண அபிவிருத்திக்காகப் பல்வேறு நிதி மூலங்கள் ஊடாக நிதி ஒதுக்கப்படுகின்றது. ஆனால், ஒதுக்கப்படும் நிதிகள் பலவும் செலவு செய்யப்படாமல் திருப்பி அனுப்பப்படும் நிலை காணப்படுகின்றது. இந்த மாகாணத்தில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. இருந்த போதிலும் பல நிதிகள் திருப்பி அனுப்பப்படுகின்ற நிலையில் வடக்கு மாகாணத்தில் உள்ளக வீதிகளைப் புனரமைப்பதற்கு எவ்வளவு நிதி வேண்டும்?” – என்று ஜனாதிபதி இதன்போது கேள்வி எழுப்பினார்.

இதன்போது சம்பந்தப்பட்ட அதிகாரி விவரங்கள் தெரியாது தடுமாறிய நிலையில், ஜனாதிபதி மீண்டும்,

“வீதிகளைப் புனரமைப்பதற்கு எவ்வளவு நிதி வேண்டும் எனச் சரியாகக் கூறுங்கள், ஏறக்குறைய என்று கதை கூற வேண்டாம்.

நாடு பொருளாதார நெருக்கடி நிலையில் இருந்து இன்னும் மீளவில்லை. இங்கு பெற்றோல் இருக்கின்றது, காஸ் இருக்கின்றது என்றால் பொருளாதார நெருக்கடி இல்லை என நினைக்க வேண்டாம்.

நாங்கள் இன்னும் பொருளாதார நெருக்கடியில் இருந்து கொண்டே இம்முறை வரவு – செலவுத் திட்டத்தில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவுள்ளோம்.

ஆகவே, அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்தால் அதனை உரிய முறையில் பயன்படுத்துவது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பொறுப்பாகும்.” – என்று கூறினார்.

இவ்வாறு ஜனாதிபதி பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் தகவல்களைக் கேட்ட போதும் துறை சார்ந்த ரீதியில் உரிய தகவல்கள் தெரியாமல் அதிகாரிகள் தடுமாறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## போதையில் தேசம்

இலங்கையர்கள் மது மற்றும் சிகரெட் பயன்பாட்டிற்காக நாளொன்றுக்கு ரூ. 121 கோடி ரூபாவைச் செலவிடுகின்றனர் என்ற அதிர்ச்சித் தகவலை மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் வெளியிட்டுள்ளது. இந்த கணக்கெடுப்பு கடந்த 2022 ஆம் ஆண்டு - கொவிட்டுக்குப் பின்னரான காலத்தில் - நடத்தப்பட்டுள்ளது.

இந்த தொகை தற்போது அதிகரித்திருப்பதாகவும் மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையத்தின் நிர்வாக இயக்குனர் சம்பத் டி சேரம் தெரிவித்துள்ளார்.

இதன்படி சாராயம் அருந்துவதற்கு 51 கோடி ரூபாவும், பியருக்கு ரூ. 18 கோடி ரூபாவும், சிகரெட்டுகளுக்கு 52 கோடி ரூபாவும் நாளாந்தம் செலவிடப்பட்டுள்ளதாக மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் மது மற்றும் சிகரெட் விற்பனை மூலம் 16, 520 கோடி ரூபா வரி வருவாய் பதிவாகியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், மது மற்றும் போதைப்பொருள் பயன்பாடு காரணமாக சுகாதார மற்றும் பொருளாதாரத் துறைகளுக்கு அந்த ஆண்டில் 23,700 கோடி ரூபா செலவு பதிவாகியுள்ளதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

இலங்கையில் இருதய நோய்கள், புற்றுநோய் மற்றும் சுவாச நோய்கள் போன்ற தொற்றாத நோய்கள் அதிகரித்து வருகின்றன. இவை ஏற்படுவதற்கு 83 வீதம் மதுபானம் மற்றும் புகையிலைப் பாவனை காரணமாக இருப்பதாகவும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், மதுபான பாவனையால் நாளொன்றுக்கு 40 முதல் 50 பேர் வரை உயிரிழக்கின்றனர் எனவும் இந்தத் தொகை வருடத்திற்கு 15,000 முதல் 20,000 எனவும் கூறப்படுகின்றது.

ஆக, மது போன்ற போதைப் பொருள்கள் மற்றும் சிகரெட் பாவனை மூலம் நாடும் மக்களும் வினையை விலை கொடுத்து வாங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பது துலாம்பரமாகியுள்ளது.

2023 ஆம் ஆண்டில் வரிகள் 20 வீதம் வரை அதிகரித்தமையைத் தொடர்ந்து, மது அருந்துதல் 83 லட்சம் லீட்டர் குறைந்துள்ளது. அதே நேரத்தில் வரி வருவாய் 1160 கோடி ரூபா அதிகரித்துள்ளது. சிகரெட் விற்பனையிலிருந்து வரி வருவாய் 770 கோடி ரூபா அதிகரித்துள்ளது. அதே சமயம் சிகரெட் விற்பனை 52 கோடி 15 லட்சம் யூனிட்கள் குறைந்துள்ளது என்றும் மது மற்றும் போதைப் பொருள் தகவல் மையம் மேலும் தெரிவித்தது.

2016 செப்ரெம்பரில் மது மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இலங்கையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்தே, மது விற்பனையின் மூலம் அதிக அளவு வருமானம் அரசுக்குக்கிடைப்பதாகக் குறிப்பிட்டமை மறக்கக் கூடியதல்ல.


''யாழ்ப்பாணத்தில் எழுபதுக்கும் மேற்பட்ட மதுபான விற்பனை நிலையங்கள் செயற்படுகின்றன. மது விற்பனையின் மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்தே அரச திறைசேரிக்கு அதிக அளவில் பணம் வந்து சேர்கின்றது. போதைப் பொருள் பாவனை மற்றும் விற்பனையால் யாழ் மாவட்டத்தில் மிகவும் மோசமான சமூகப் பிரச்சினைகள் எழுந்திருக்கின்றன.'' - என்று அப்போது குறிப்பிட்டிருந்தார் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் அரசியல் கையூட்டாக வழங்கப்பட்ட மதுபான சாலை உரிமங்களில் பெரும் எண்ணிக்கையானவை கிளிநொச்சி மாவட்டத்திலேயே விநியோகிக்கப்பட்டிருக்கின்றன எனப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

இந்தப் பின்புலத்தில் மது, சிகரெட் போன்ற போதைப் பொருள்களினால் பெரிதும் பாதிக்கப்படும் பிரதேசமாக தமிழர் தாயகம் மாறி இருக்கக்கூடிய ஆபத்து உண்டு. சமூக, சமய, அரசியல் தரப்புகள் விரைந்து விழிப்புணர்வை ஏற்படுத்தி, போதை அரக்கனின் பிடியிலிருந்து தேசத்தை விடுவிப்பதற் கான முயற்சியில் முழுமூச்சோடு ஈடுபட வேண்டும் என்பதை இந்த புள்ளி விவரங்கள் நமக்கு உணர்த்தி நிற்கின்றன.

# ஈழத் தமிழர்களின் உரிமைக்காக வாழ்நாள் முழுவதும் போராடியவர்!

## மாவை சேனாதிராஜாவின் மறைவை அடுத்து வைகோ இரங்கல்





ஈழத் தமிழ் மக்களின் உரிமைகளை மீட்டெடுக்க வாழ்நாள் முழுவதும் போராடிய மாவை சேனாதிராஜா, உடல் நலக் குறைவு காரணமாக தனது 82 ஆவது வயதில் இயற்கை எய்தினார் என்ற செய்தி ஆறாத் துயரை அளிக்கிறது.

தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ முகநூலில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த இரங்கலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சோமசுந்தரம் சேனாதிராஜா என்ற இயற்பெயரைக் கொண்டவர். இலங்கை பல்கலைக் கழகத்தில் இளங்கலைப் பட்டம் பெற்ற இவர், சிறு வயதிலேயே தமிழ் ஈழ விடுதலைக்காக ஓங்கிக் குரல் கொடுத்தார்.

ஈழத்தின் தந்தை செல்வாவை நிறுவனராகக் கொண்ட தமிழரசுக் கட்சி நடத்திய சத்தியாகிரகப் போராட்டத்தில் 1961 ஆம் ஆண்டில் முதன் முதலாகக் களம் இறங்கிப் போராடினார்.

அதன் பின்னர் 1962 ஆம் ஆண்டு முதல் தமிழரசு கட்சியில் இணைந்து பணியாற்றிய இவர், அந்தக் கட்சியின் ஈழத் தமிழர் இளைஞர் இயக்கச் செயலாளராக 1966 ஆம் ஆண்டு முதல் 1969 ஆம் ஆண்டு வரை மிகச் சிறப்பாகப் பணியாற்றினார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ் இளைஞர் பேரவையின் செயலாளராகவும் பணியாற்றி, 2024 ஆம் ஆண்டு இலங்கை தமிழரசு கட்சியின் தலைவராகவும் பணியாற்றினார்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ் ஈழ விடுதலை இயக்கம், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவைகள் இணைந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரோடும் தோழமையுடன் இணைந்து பணியாற்றிய இவர், இலங்கை அரசின் அடக்கு முறைக்கு எதிராக போராடியதால், ஏழு ஆண்டு காலம் சிறையில் அடைக்கப்பட்டார்.

2001, 2004, 2010, 2015 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகவும் மிகச் சிறப்பாகப் பணியாற்றினார்.

என் மீது அளவு கடந்த பாசமும், நட்பும், தோழமையும் கொண்டிருந்த அவர், பலமுறை எங்கள் வீட்டில் சந்தித்து விருந்துண்டு அன்பை வெளிப்படுத்தியுள்ளார்.

ஈழத்தமிழர் விடுதலை என்பது நிறைவு பெறாத போராட்டமாக இன்றைக்கும் தொடர்ந்து கொண்டிருக்கும் சங்கடங்களும், சவாலும் நிறைந்துள்ள இந்தக்கால கட்டத்தில் சேனாதிராஜாவின் மறைவு ஈழத்தமிழ் மக்களுக்கு பேரிழப்பாகும். அவரை இழந்த துயரில் தவிக்கும் அவரது இயக்கத்தினருக்கும், இல்லத்து உறவுகளுக்கும், தமிழீழ சொந்தங்களுக்கும் மறுமலர்ச்சி தி.மு.கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை கண்ணீருடன் தெரிவித்துக்கொள்கிறேன்.- என்றுள்ளது.

# நான் சந்தித்த முதலாவது அரசியல் தலைவர் மாவை!

## அனுதாப செய்தியில் தவராசா தெரிவிப்பு



மூத்த அரசியல் போராளியான அண்ணன் மாவை சேனாதிராசாவின் மறைவு, ஈழத் தமிழர்களின் அரசியல் சரித்திரத்தை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது என்று தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் எஸ். தவராசா, அரசியல் வாழ்வில் தான் சந்தித்த முதலாவது அரசியல் தலைவர் மாவை சேனாதிராசா எனவும் தெரிவித்துள்ளார்.

மாவை சேனாதிராசாவின் மறைவை அடுத்து வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராசா வின் மறைவு தொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

ஈழத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக 60 ஆம் ஆண்டுகளில் இருந்து இறுதிவரையில் தீவிரமாகச் செயற்பட்டவர், இன்று தனது மூச்சை நிறுத்தி இருக்கின்றார்.

அந்தவகையில் ஈழத் தமிழர்களின் ஒரு சரித்திரம் ஓய்ந்திருக்கின்றது என்று சொல்லலாம்.

70 களின் ஆரம்பங்களில் என்னுடைய அரசியல் செயற்பாடுகளின் ஆரம்பத்தில் எம்மால் ஆரம்பிக்கப்பட்ட மாணவர் பேரவையின் முதலாவது கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்தாழம்மிக்க உரையை நிகழ்த்தி இருந்தார்.

அந்தவகையில், நான் சந்தித்த முதலாவது அரசியல் தலைவராக அமரர் மாவை சேனாதிராஜாவையே அடையாளப்படுத்துவதுண்டு.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு பின்னர், சூழல் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு நாம் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொண்ட காலங்களிலும் அவருக்கும் எமக்கும் இடையில் புரிந்தணர்வு பேணப்பட்டு வந்தது.

எனினும், கால ஓட்டத்தில் அவர் சார்ந்திருந்த அரசியல் கட்சி சுவீகரித்துக் கொண்ட நிலைப்பாடுகள், எமக்கும் அவருக்கும் இடையில் கருத்தியல் வேற்றுமைகளை ஏற்படுத்திய போதிலும், பரஸ்பர புரிதல் தொடர்ந்து கொண்டே இருந்தது.

அண்ணன் மாவை சேனாதிராசா வின் மறைவால் துயருற்றிருக்கும் உறவினர்கள், கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எனது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.- என்றுள்ளது.



# அமரர் மாவையின் அஞ்சலி பதாதைகள் காரைதீவில்!

**(வி.ரி.சகாதேவராஜா)**

முன்னாள் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மறைந்த சோமசுந்தரம் சேனாதிராஜா (மாவை சேனாதிராஜா) வுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக காரைதீவு எங்கும் அஞ்சலி பதாதைகள் கட்டப்பட்டுள்ளன.

காரைதீவு விபுலானந்த சதுக்கத்தில் அஞ்சலி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வானது இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேசக் கிளை தலைவரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் இடம்பெற்றது.

அஞ்சலி நிகழ்வில் காரைதீவுக் கிளையின் உபதலைவர், உபசெயலாளர் உள்ளிட்ட பல உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கட்சியின் மூத்த உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# மாவை சேனாதிராஜாவின் மறைவு உலகவாழ் தமிழர்களுக்கு பாரிய இழப்பு!

### சமூக செயற்பாட்டாளர் உதுமான்கண்டு நாபீர் இரங்கல்

(பாறுக் ஷிஹான்)

தமிழ் தேசிய அரசியல் வரலாற்று ஆளுமைகளுள் தவிர்க்க முடியாத ஒருவராக செயற்பட்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவின் மறைவு தமிழ் மக்களுக்கும் இலங்கை தமிழரசு கட்சிக்கும் பாரிய இழப்பாகும்.

இவ்வாறு சமூக செயற்பாட்டாளரும் நாபீர் பவுண்டேஷன் நிறுவனமான சட்டத்தரணி உதுமான் கண்டு நாபீர் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அந்த இரங்கலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மாவை சேனாதிராஜா தனது 64 வருட அரசியல் பயணத்தில் அரசியல் தலைவராக தமிழ் மக்களுக்காக கடும் பணியாற்றியுள்ளார்.

யுத்தம் முடிவுறுவதற்கு முன்னரும் பின்னரும் இவரது அரசியல் முன்னெடுப்புகள் பல்வேறு பரிணாமங்களை கொண்டுள்ளதுடன் மக்கள் விடுதலைக்காக போராட்டங்கள் பலவற்றை செய்து சிறைவாசம் அனுபவித்தவர். ஜனநாயக



நீரோட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலங்களில் இவரது குரல் அடக்குமுறைக்கு எதிரான மக்களின் குரலாக நாடாளுமன்றத்தில் ஓங்கி ஒலித்தது.

இவரது பிரிவில் துயருறும் அன்னாரது குடும்பத்தாருக்கும் உலக வாழ் தமிழ் மக்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.- என்றுள்ளது.

# யாழ். மாவட்ட முஸ்லிம்களது வெளியேற்றத்தில் கண்கலங்கி நின்றவர்தான் மாவை சேனாதிராஜா!

## இரங்கல் செய்தியில் ரிஷாட் பதியுதீன் தெரிவிப்பு



இனங்களுக்கப்பால் மனித நேயமே முதன்மை என்ற அடிப்படையில் தமது அரசியல் நகர்வுகளை முன்னெடுத்த மூத்த அரசியல்வாதியும் தமிழரசுக் கட்சியின் தலைவர்களில் ஒருவருமான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா வின் மறைவு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மாவை சேனாதிராஜாவின் மறைவு தொடர்பில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளதாவது,

யாழ். மாவட்ட மக்களைப் பிரதிநிதித்துவம் செய்து அவர்களின் பல்வேறு தேவைகள் தொடர்பிலும், அது போன்று அம்மக்களது பாதுகாப்பு தொடர்பிலும் தொடர்ந்தும் குரல் கொடுத்துவந்த ஒரு சிறந்த மனிதராகவும், அரசியல் ரீதியில் குறுகிய சிந்தனைகள் அற்ற பரந்த பார்வையைக் கொண்ட ஒருவராகவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவை அடையாளம் காணுகின்றேன்.

குறிப்பாக வடபுல முஸ்லிம்களின் வெளியேற்றம் அதிலும் யாழ். மாவட்ட முஸ்லிம்களது வெளியேற்றத்தின் போது கண் கலங்கிய ஒருவராகவும், இந்த வெளியேற்றத்தை விரும்பாத ஒரு அரசியல் தலைவராக தனது சகோதர சமூகத்தின் உணர்வுகளிலும் இரண்டறக் கலந்த ஒருவராக அமரர் மாவை சேனாதிராஜா இருந்துள்ளார்.

இந்த நிலையில் தனது 83 வயதில் இயற்கை எய்திய மாவை சேனாதிராஜாவின் இந்த இழப்பு தமிழ் பேசும் மக்களுக்கும், குறிப்பாக தமிழ் மக்களின் அரசியல் தீர்மாணங்களிலும் பெரும் இடை வெளியைத் தோற்றுவிக்கும்.

அவரது இழப்பால் துயர்வுறும் குடும்பத்தினருக்கும், அவரது ஆதரவாளர்களுக்கும் எனது அழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன். – என்றுள்ளது.

# நுவரெலியாவில் கடும் மழை 42 குடும்பங்கள் பாதிப்பு!

(மஸ்கெலியா )

கடும் மழையுடன் கூடிய கடுமையான வானிலை காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் 42 குடும்பங்களைச் சேர்ந்த 193 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 17 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம், 22 குடும்பங்களைச் சேர்ந்த 100 பேர் 02 பாதுகாப்பான முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய (30) நிலவரப்படி வலப்பனை மற்றும் ஹகுரான்கெத பகுதிகளில் சுமார் 13 வீதிகள் மூடப்பட்டுள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ ஊடக மையம் தெரிவித்துள்ளது. மண் சரிவால் இவை மூடப்பட்டுள்ளன.

அந்தச் சாலைகளை விரைவில் இயல்பு நிலைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், ஹங்குரான்கெத்த பிரதேச செயலாளர் பிரிவின் ரிகில்லகஸ்கட ஹேவாஹெட்ட கோனபிட்டிய மெர்ரி கோல்ட் பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் பல வீடுகள் மற்றும் வாகனங்கள் சேதமடைந்துள்ளன என்று



தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அதிகாரிகளுக்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்று நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தெரிவித்தார்.






### யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில்

# 20 கோரிக்கைகள் அடங்கிய மகஜரை அநுரவிடம் வழங்கிய கஜேந்திரகுமார்!

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கா தலைமையில் இன்று (31) இடம்பெற்ற யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 20 கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளார்.

அந்த மகஜரில் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் வருமாறு,

1. யாழ் போதானா வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதி உடனடியாக அமைக்கப்படல் வேண்டும்.

2. யாழ் போதனா வைத்தியசாலையிலுள்ள நோயாளர் விடுதிகள் அதிகளவான நோயாளர்களால் நிரம்பி வழிகின்றது. பல விடுதிகளில் கட்டில்கள் பற்றாக்குறை காரணமாக அவ்வப்போது நோயாளர்கள் நிலங்களில் படுக்க வேண்டிய நிலையும், இரவு முழுவதும் கதிரைகளில் அமர்ந்தவாறு உறங்கும் நிலையும், ஒரு கட்டிலில் இரண்டு நோயாளர்கள் படுக்க வேண்டிய நிலையும் காணப்படுகின்றது. நோயாளிகளைப் பராமரிப்பதற்காக உடனிருப்பவர்கள் பல மணி நேரமாக நின்ற நிலையிலேயே பராமரிப்பு பணிகளில் ஈடுபட வேண்டிய நிலையிலுள்ளனர். இந்த நிலை உடனடியாகச் சீர் செய்யப்படல் வேண்டும்.

3. யாழ் பண்ணையில் அமைந்துள்ள மார்பாக சிகிச்சை (காச நோய்) பிரிவில் அடிப்படை வசிதிகள் மேம்படுத்தப்படல் வேண்டும். மயிலிட்டியில் அமைந்திருந்த காசநோய் பிரிவை அந்த இடத்தில் மீளவும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

மயிலிட்டியில் இயங்கிய காசநோய் வைத்தியசாலை தற்காலிகமாக கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் இயங்குகின்றது. ஆனாலும் அங்கு அந்த அலகிற்கான ஆளணிகள் எதுவும் நியமிக்கப்படவில்லை. உடனடியாக ஆளணி நியமனம் செய்யப்படல் வேண்டும்.

பண்ணையில் உள்ள மார்பாக சிகிச்சை நிலையத்திற்கென நிரந்தரமான எக்ஸ்றே றேடியோ கிறாபர் இல்லை. நிரந்தரமாக நியமிக்கப்படல் வேண்டும். (தற்போது திங்கள் புதன் ஆகிய இரண்டு நாள்கள் மட்டும்)

இவ்வைத்தியசாலையில் பரிசோதனைக்காக பெறப்படும் சளி மாதிரிகளை பாதுகாப்பாகளஞ்சியப்படுத்துவதற்கான குளிர்சாதனப் பெட்டிகள் பெரும் பற்றாக்குறையாக உள்ளது. பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகள் ஐந்து நாள்களுக்குள் சோதனை செய்யப்படல் வேண்டும். ஆனால் உரிய கருவிகள் இன்மையால் ஒரு வருடத்துக்கும் மேலாக சேமிப்பில் உள்ள நிலை காணப்படுகின்றது. இந்த நிலை சீர் செய்யப்படல் வேண்டும்.

4. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பெருமளவான இளையோர் போதைப் பொருள் பயன்பட்டுக்கு அடிமையாகியுள்ளனர். அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களை புனவாழ்வளித்து மீட்டெடுப்பதற்கான புனர்வாழ்வு நிலையம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அமைக்கப்படல் வேண்டும்.

5. யாழ். மாவட்டத்தில் கடற்தொழில்படகுகளை பாதுகாப்பதற்கான கல்லணைகள் அமைத்தல் –

பருத்தித்துறை மூர்க்கம், முனை, கொட்டடி கடற்கரை, சுப்பர்மடம், இன்பர்சிட்டி கடற்கரை, சக்கோட்டை கடற்கரை, திக்கம் கடற்கரை, கொத்தியால் கடற்கரை, றேவடி கடற்கரை, ஆதிகோவிலடி கடற்கரை, தொண்டமனாறு கடற்கரை, பலாலி கடற்கரை, சேந்தான்குளம் கடற்கரை, மாதகல் கடற்கரை ஆகிய இடங்களில் படகுகள் தரித்துநிற்கும் இடங்களில் படகுகளைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்புக் கல்லணைகள் அமைக்கப்படல் வேண்டும்.

படகுகள் நுழையும் பகுதிகளை ஆழமாக்குதல் –

மூர்க்கம் தொடக்கம் மாதகல் வரை படகுகள் தொழிலுக்காக இறக்கப்படும் நுழைவு வான்கள் நீண்டகாலமாக ஆழப்படுத்தப்படாமையினால் படகுகள் சேதமடைகின்றன. படகுகள் சேதமடைவதனை தடுக்கும் வகையில் குறித்த இடங்கள் உடனடியாக ஆழப்படுத்தப்படல் வேண்டும்.

கொத்தியால் கடற்கரையில் படகுகள் தரிப்பிடத்தில் அகழப்பட்ட மண்ணை அப்புறப்படுத்த நடவடிகை எடுத்தல் –

வல்வெட்டித்துறை கிழக்கு கிராமிய கடற்தொழில் அமைப்பினருக்குச் சொந்தமான படகுகள் தரித்து நிற்கும் பகுதியிலிருந்து அகழப்பட்ட மண் கடற்கரையிலேயே குவிக்கப்பட்டுள்ளது. அந்த மண் மீண்டும் மீண்டும் இறங்குதுறைக்குள் சென்று படகுகள் நிறுத்தும் பகுதியை மூடுவதால் படகுகளை நிறுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு கொட்டப்பட்டுள்ள மண்ணை அகற்றுவதற்கான அனுமதியை சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் இன்னமும் வழங்கவில்லை. எனவே குறித்த பகுதியில் குவிக்கப்பட்டுள்ள மண்ணை அண்மையிலுள்ள பொது அமைப்புக்களது பயன்பாட்டுக்காக எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படல் வேண்டும்.

தொடர்ச்சி ▼

# 20 கோரிக்கைகள் அடங்கிய மகஜரை அநுரவிடம் வழங்கிய கஜேந்திரகுமார்!

தொடர்ச்சி▲

6. இந்திய மீனவர்களால் வலைகள் படகுகள் சேதமாக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படல் வேண்டும்.

7. கனமழை வெள்ளப்பெருக்கு காரணமாக ஏற்பட்ட விவசாய அழிவுகளுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படல் வேண்டும்.

8. யாழ். குடாநாட்டில் சொந்தக் காணிகள் மற்றும் வீடுகள் இல்லாதவர்களுக்கு காணிகள் வழங்கவும் வீடுகள் கட்டிக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். வீட்டுத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி போதாமலுள்ளது, அத்தொகை அதிகரிக்கப்படல் வேண்டும்.

9. தையிட்டியில் தனியார் காணியில் அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோத திஸ்ஸ விகாரை கட்டுமானம் அகற்றப்படல் வேண்டும். தனியார் காணிகள் அனைத்தும் பொது மக்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

10. மயிலிட்டியில் விடுவிக்கப்படாத மூன்று கிராம சேவையாளர் பிரிவுகள் உட்பட யாழ். குடாநாட்டில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தனியார் காணிகள் மற்றும் பொதுக் காணிகள் அனைத்தும் விடுவிக்கபடல் வேண்டும்.

வசாவிளான் சந்தியிலிருந்து பலாலி சந்தி வரையான வீதி பொது மக்கள் பயன்பாட்டுக்காகத் திறக்கப்படல் வேண்டும்.

11. யாழ். நகர அபிவிருத்திக்கு கடந்த 2017 ஆம் ஆண்டில் உலக வங்கி வழங்கிய நிதி உதவியில் வடிகாலமைப்பில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பான விரிவான விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

12. யாழ்ப்பாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் ஒவ்வொன்றுக்கும் தகுதிபெற்ற திட்டமிடலாளர் ஆளணி உருவாக்கப்பட்டு, நியமனங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

யாழ்ப்பாணம் மாவட்டம் முழுமைக்குமான பிரதான வடிகாலமைப்பு திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.

13. வீதி விளக்குகள் பொருத்துவது தொடர்பில் மினசார சபைக்கும் – பிரதேச சபைகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் உடனடியாகத் தீர்த்து வைக்கப்படல் வேண்டும்.

14. நெடுந்தீவுக்கான கடல்வழிப் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படும் படகுச் சேவைகள் கடற்படையினரிடம் இருந்து மீளப்பெற்று வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்படல் வேண்டும்.

15. வீதி அபிவிருத்தி அதிகார சபையால் இயக்கப்பட்டுவந்த குறிகாட்டுவான் – நயினாதீவுக்கான போக்குவரத்துப் பாதை பழுதடைந்த நிலையில் ஒரு வருடமாகத் திருத்தப்படாமல் உள்ளது. அதனை உடனடியாகத் திருத்த வேண்டும்.

நயினாதீவு தெற்குப் பகுதியில் அமைந்துள்ள இறங்குதுறை பழுதடைந்த நிலையில் நீண்டகாலமாக அங்கு போக்குவரத்து இடம்பெறுவதில்லை. அந்த இறங்குதுறை திருத்தி அமைக்கப்படல் வேண்டும்.

16. குறிகாட்டுவான் இறங்குதுறை உடனடியாக விஸ்தரிக்கப்படல் வேண்டும்.

குறிகாட்டுவான் இறங்குதுறையிலிருந்து புங்குடுதீவு நோக்கிச் செல்லும் வீதி சுமார் 5 கிலோ மீற்றர் குன்றும் குழியுமாக உள்ளது. உடனடியாகத் திருத்தப்படல் வேண்டும்.

17. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு நிரந்தர மாகாண கல்விப் பணிப்பாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

18. வடக்கு மாகாணாத்தில் எஸ்.எல்.ஈ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கான பற்றாக்குறை 50 வீதத்துக்கு மேல் காணப்படுகின்றது. இந்த வெற்றிடங்களை உடனடியாக நிரப்பும் வகையில் பிரமாணங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

19. வடக்கு மாகாணத்தில் 3555 ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன. அவற்றை நிவர்த்தி செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கபடல் வேண்டும்.

20. வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான ஆளணி வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படல் வேண்டும்.





# சட்டத்தை மீறிய உணவகங்களுக்கு எதிராக சம்மாந்துறையில் நடவடிக்கை!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ் )

சம்மாந்துறையில் உணவகங்கள் மீது சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌசாத் தலைமையில் நேற்று முன்தினம் (29) புதன்கிழமை திடீர் சோதனை நடைபெற்றது.

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரிகளால் உணவு நிலையங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது, உணவுச் சட்டத்தை மீறிய இரண்டு பேக்கரிகள் உட்பட ஆறு உணவகங்க ளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அத்துடன், வட்டிலப்பம் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர் ஒருவர் நிறக் குறியீடு, உப்பு, இனிப்பு, கொழுப்பு இடாமல் விற்பனை செய்தமை தொடர்பாக இறுதி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று (30) இந்த ஆறு உணவகங்களுக்கும் மொத்தமாக 65 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.





# 250 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் கிழக்கு மாகாணத்தில் நேற்று வழங்கல்!

(ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 250 பட்டதாரிகளுக்கு, ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று (30) திருகோணமலை, உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

2024 போட்டிப்பரீட்சை நடத்தப்பட்டு அதிலிருந்து 1000 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இதன்போது நேர்முகப் பரீட்சையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 250 பேருக்கே ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இதில் அம்பாறை மாவட்டத்தில் இருந்து சிங்கள மொழிமூலம் 34 பேரும் தமிழ் மொழிமூலம் 61 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மொழிமூலம் 94 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள மொழிமூலம் 19 பேரும் தமிழ் மொழிமூலம் 42 பேருக்குமாக மொத்தம் 250 பேருக்கான ஆசிரியர் நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டன.



ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்ன சேகர, வெளிவிகார வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா, கிழக்கு மாகாணப் பிரதம செயலாளர் ஆர். எம். பி. எஸ். ரத்நாயக்க, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.




# வெல்லன் வீரகத்தி விநாயகர் ஆலய மஹா கும்பாபிகம்

வடமராட்சி கரவெட்டி அருள்மிகு ஸ்ரீ வெல்லன் வீரகத்தி விநாயகர் ஆலய மஹா கும்பாபிகம் எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரை நடைபெறவுள்ளது.

கும்பாபிகத்துக்கான கிரியைகள் கடந்த 29 ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. சிபூஜா ஈசான சிவாச்சாரியார் ஸ்ரீலஸ்ரீ சம்பந்தக் குருக்கள், ஆலய பிரதம குரு ஸ்ரீலஸ்ரீ க.வேதாரணியேஸ்வரன் குருக்களின் உதவியுடன் கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார்.



# இடைக்குறிச்சி சுப்பிரமணிய வித்தியாலய மாணவர் தலைவர்களுக்கு சின்னம் சூட்டடல்

(த.சுபேசன்)

யாழ்ப்பாணம், இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் வரணி, இடைக்குறிச்சி, ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

வித்தியாலயத்தின் அதிபர் தி.அப ராஜிதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் ஸ்ரீ குமரன் கலந்து கொண்டார்.






# இந்தியா உலகின் மூன்றாவது பொருளாதார நாடாக மாறும்

## நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் உரை

"உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா மாறும். ஒரே நாடு, ஒரே தேர்தல், வக்பு திருத்த மசோதா ஆகியவற்றை நிறைவேற்றுவதை நோக்கி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது."

- இவ்வாறு நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தெரிவித்தார்.



இந்த ஆண்டின் முதல் கூட்டத்தொடரான வரவு செலவு திட்ட கூட்டத் தொடரை தொடங்கிவைக்கும் நோக்கில், நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் உதம்பூர்-ஸ்ரீநகர்-பாரமுல்லா ரயில் இணைப்புத் திட்டம் நிறைவடைந்துள்ளது. இப்போது நாடு காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை ரயில் பாதை மூலம் இணைக்கப்படும். விமான நிறுவனங்கள் 1700 புதிய விமானங்களுக்கான ஆர்டர்களை வழங்குவதன் மூலம் நாட்டின் விமானப் போக்குவரத்துத் துறை வேகமாக முன்னேறி வருகிறது. இந்தியாவின் மெட்ரோ ரயில் நெட்வொர்க் இப்போது 1000 கிலோமீட்டர் மைல்கல்லைக் கடந்துவிட்டது. இந்தியா உலகின் மூன்றாவது பெரிய மெட்ரோ நெட்வொர்க்கைக் கொண்டுள்ளது. அனைத்து குடிமக்களுக்கும் சுகாதார சேவைகளை உறுதி செய்வதற்காக, நாட்டில் 1.75 லட்சம் 'ஆரோக்கிய கோயில்கள்' நிறுவப்பட்டுள்ளன. புற்றுநோய் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, பல புற்றுநோய் மருந்துகளுக்கான சுங்க வரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

உதம்பூர்-ஸ்ரீநகர்-பாரமுல்லா ரயில் இணைப்புத் திட்டம் நிறைவடைந்துள்ளது. இப்போது நாடு காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை ரயில் பாதை மூலம் இணைக்கப்படும். விமான நிறுவனங்கள் 1700 புதிய விமானங்களுக்கான ஆர்டர்களை வழங்குவதன் மூலம் நாட்டின் விமானப் போக்குவரத்துத் துறை வேகமாக முன்னேறி வருகிறது. இந்தியாவின் மெட்ரோ ரயில் நெட்வொர்க் இப்போது 1000 கிலோ மீற்றர் மைல்கல்லைக் கடந்துவிட்டது. இந்தியா உலகின் மூன்றாவது பெரிய மெட்ரோ நெட்வொர்க்கைக் கொண்டுள்ளது. அனைத்து குடிமக்களுக்கும் சுகாதார சேவைகளை உறுதி செய்வதற்காக, நாட்டில் 1.75 லட்சம் 'ஆரோக்கிய கோயில்கள்' நிறுவப்பட்டுள்ளன. புற்றுநோய் நோயாளிகளின் எண்

ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, பல புற்றுநோய் மருந்துகளுக்கான சுங்க வரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

வடகிழக்கின் எட்டு மாநிலங்களின் திறனை முழு நாடும் காண உதவும் வகையில், முதல் அஷ்டலட்சுமி மஹோத்சவம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாட்டின் எல்லைகளைப் பாதுகாக்கவும், உள்நாட்டுப் பாதுகாப்பை உறுதி செய்யவும் நாடு பல வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பாதுகாப்புத் துறையில் தன்னம்பிக்கையுடன் அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந்தியாவில் தயாரிப்போம் என்பதில் இருந்து, உலகுக்காக தயாரிப்போம் என்பதை நோக்கி நாம் நகர்ந்துள்ளோம். வளர்ச்சி அடைந்த பாரதமாக மாறுவதுதான் நமது ஒரே ஒரு குறிக்கோள். உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா மாறும்." - என்றார்.

# வரவு செலவு திட்டம் புதிய உத்வேகம் தரும்

## பிரதமர் மோடி உறுதி



வரவு செலவு திட்டத்தில் அனைவருக்குமான திட்டங்கள் இடம்பெறும். புத்தாக்கம், அனைவரையும் உள்ளடக்கிய திட்டங்கள், மூலதனம் ஆகியன தான் இந்தியப் பொருளாதாரத்தின் அடித்தளமாக இருக்கின்றன. அந்த வகையில், இந்த வரவு செலவு திட்டம் மக்களுக்கு புதிய உத்வேகம் தரும்."

- இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வரவு செலவு திட்ட கூட்டத் தொடர் இன்று தொடங்கியுள்ளது. இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உரையாற்றினார். மத்திய வரவு செலவு திட்டத்தை நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் நாளை தாக்கல் செய்கிறார்.

முன்னதாக, வரவு செலவு திட்ட கூட்டத்தொடருக்காக நாடாளுமன்றம் வருகைதந்த பிரதமர் மோடி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கருத்து தெரிவிக்கையில்,

"வரவு செலவு திட்ட கூட்டத்தொடர் சுமுகமாக நடைபெற வேண்டும் என்று அன்னை லட்சுமியை பிரார்த்தனை செய்கிறேன். ஏழை, எளிய மக்களை அன்னை லட்சுமி ஆசிர்வதிப்பார். மூன்றாவது முறையாக ஆட்சி செய்ய எங்களுக்கு மக்கள் வாய்ப்பளித்துள்ளனர். பா.ஜ.கவின் மூன்றாவது ஆட்சியின் முதல் முழு வரவு செலவு திட்டம் இது. இந்த வரவு செலவு திட்டத்தி அனைவருக்குமான திட்டங்கள் இடம்பெற்றிருக்கும். புத்தாக்க, அனைவரையும் உள்ளடக்கிய திட்டங்கள், மூலதனம் ஆகியன தான் இந்தியப் பொருளாதாரத்தின் அடித்தளமாக இருக்கின்றன. அந்தவகையில், இந்த வரவு செலவு திட்டம் மக்களுக்கு புதிய உத்வேகத்தைத் தரும்.

இந்த வரவு செலவு திட்ட கூட்டத் தொடரில் பல்வேறு மசோதாக்கள் தாக்கல் செய்யப்படவுள்ளன. வரலாற்று சிறப்புமிக்க சில மசோதாக்கள் மீதான விவாதங்கள் நடைபெறவுள்ளன. மகளிர் முன்னேற்றத்துக்காக, இளைஞர் நலனுக்கு சில முக்கிய முடிவுகளும் எடுக்கப்பட உள்ளன. சீர்திருத்தம், செயல்பாடு, மாற்றம் ஆகியன நமது அடுத்த இலக்குகளாக இருக்கப்போகிறது.

மத்திய, மாநில அரசுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். மக்களின் மேம்பாட்டுக்காக தொடர்ந்து இந்த அரசு பாடுபடும். இந்தியாவின் வளர்சிக்காக அனைத்து எம்.பி.க்களும் தங்கள் பங்களிப்பை செலுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

இந்தியா ஜனநாயக நாடாகி 75 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இது பெருமைக்குரிய விஷயம். இந்த தருணத்தில் உலக அரங்கில் இந்தியா தன்னை வலுவாக நிலைநிறுத்தியுள்ளது. 2047 ஆம் ஆண்டில் இந்தியா தனது 100 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும்போது இந்தியா வளர்ந்த நாடாக இருக்கும்."

- என்றார்.



# அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விபத்து; விமானத்தின் கருப்பு பெட்டி மீட்பு

அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானம் ஒன்றும் இராணுவ ஹெலிக்கொப்டரும் கடந்த புதன்கிழமை இரவு வொஷிங்டன் டி.சி.க்கு அருகே மோதி விபத்துக்குள்ளாகின.

இதையடுத்து மீட்பு பணிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் நிலையில், பொடோமேக் ஆற்றில் இருந்து குறைந்தது 40 உடல்கள் மீட்கப்பட்டன.

இதனிடையே, விபத்தில் சிக்கிய எவரும் உயிர் பிழைத்திருப்பதற்கான வாய்ப்புகள் இல்லை என்று வொஷிங்டன் டிசி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 40 உடல்கள் மீட்கப்பட்டதாக சட்ட அமலாக்க ஆதாரங்களை மேற்கோள் காட்டி செய்திகள் தெரிவித்தன.

அதேநேரம், விபத்துக்குள்ளான அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில் இருந்து கருப்பு பெட்டிகள் எனப்படும் விமான தரவு பதிவுகள் மற்றும் காக்பிட் குரல் பதிவுகளை அதிகாரிகள் மீட்டுள்ளனர் என்று ஆதாரங்களை மேற்கொள்காட்டி பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

கருப்பு பெட்டிகள் விமானத்தில் என்ன தவறு நடந்திருக்கலாம் என்பதற்கான தடயங்களை வழங்க உதவும்.

விபத்து நடந்த இடத்திற்கு அருகில் உள்ள தேசிய போக்குவரத்து பாதுகாப்பு வாரிய ஆய்வகத்தில் கருப்பு பெட்டி ஆதாரங்கள் பகுப்பாய்வு செய்யப்படும்.

கடந்த புதன்கிழமை இரவு வொஷிங்டன் டிசியின் ரொனால்ட் ரீகன் தேசிய விமான நிலையத்திற்கு அருகே நடுவானில் ஏற்பட்ட இந்த மோதலை அடுத்து விமானம் குளிர்ச்சியான பொடோமேக் ஆற்றில் விழுந்து நொருங்கியது.

விபத்து குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் பராக் ஒபாமா ஜனாதிபதியாக இருந்தபோது ஃபெடரல் ஏவியேஷன் நிர்வாகத்தில் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்களுக்கான பணியமர்த்தலின் தரம் குறைக்கப்பட்டது பேரழிவிற்கு ஒரு காரணியாக இருக்கலாம் என்று குற்றம் சாட்டினார்.

வெள்ளை மாளிகையில் செய்தியாளர் கூட்டத்தில் வியாழக்கிழமை உரையாற்றும் போதே ட்ரம்ப் இந்த கருத்தினை முன்வைத்தார்.

# ஜப்பானில் பொது இடங்களில் புகைப்பிடிப்பதற்குத் தடை

ஜப்பானில் பொது இடங்களில் புகைப்பிடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் உலக புகழ்பெற்ற கண்காட்சிகளில் ஒன்றாக உலக எக்ஸ்போ கண்காட்சி விளங்குகிறது. கடந்த 2020 ஆம் ஆண்டு கொரோனா தொற்று பரவலையொட்டி இந்த கண்காட்சி ஒத்தி வைக்கப்பட்டது.

தொடர்ந்து 2022 ஆம் ஆண்டு டுபாயில் கோலாகலமாக நடந்தது. ஜப்பானின் ஒசாகா நகரில் உலக எக்ஸ்போ



கண்காட்சி 2025 நடைபெற இருக்கிறது. இதில் உலக நாடுகள் அனைத்தும் கலந்து கொண்டு அரங்குகளை அமைத்து தங்கள் நாட்டின் பராம்பரியம் மற்றும் பண்பாட்டை காட்சிப்படுத்த உள்ளனர்.

ஒசாகாவில் உலக எக்ஸ்போ கண்காட்சி 2025 க்கான திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

இந்தநிலையில் ஒசாகாவில் பொது இடங்களில் சிகரெட், இ-சிகரெட் உள்ளிட்ட போதைப்பொருட்களை பயன்படுத்தி புகைப்பிடிக்க அந்த நகர மக்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தாண்டு முழுவதும் தடை அமலில் இருக்கும் என்றும் மீறுவோருக்கு அபராதம் விதிக்கப்படும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

# உக்ரைன் மீது ரஷ்யா ட்ரோன் தாக்குதல்

### *9 பேர் பலி*

உக்ரைனின் அடுக்குமாடிக் கட்டடத்தின் மீது ரஷ்யா நடத்திய ட்ரோன் தாக்குதலில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

உக்ரைனின் பெரிய நகரமான சுமியில் நேற்று ரஷ்யா ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் அந்த பகுதியிலுள்ள ஒரு அடுக்குமாடிக் கட்டடமானது சேதம் அடைந்தது.

இந்த த தாக்குதலில் ஒரு குழந்தை உட்பட 8 பேர் கட்டிட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தனர். அத்தோடு 13 பேர் காயமடைந்தனர். இதனால் அந்த அடுக்குமாடிக் கட்டடத்தில் வசித்த 120 பேர் உடனடியாக வெளியேற்றப்பட்டனர்.



அத்தோடு இரவு நேரங்களில் ரஷ்யா ஏவிய 80 இற்கும் மேற்பட்ட ட்ரோன்களை உக்ரைன் இராணுவம் சுட்டு வீழ்த்தியுள்ளது.

பக்கங்கள் 03

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 31/01/2025

## ஹமில்டன் நகை கொள்ளை; சந்தேக நபர் ஒருவர் கைது

கனடாவின் ஹமில்டன் பகுதியில் நகையகம் ஒன்றில் கொள்ளையிடப்பட்ட சம்ப வத்துடன் தொடர்புடைய பதின்ம வயது இளைஞர் ஒரு வரை பொலிஸார் 02▶



# அமெரிக்காவின் வரி விதிப்பை எதிர்கொள்ள தயாராகும் கனடா

**கனடிய ஏற்றுமதிகள் மீது வரி விதிப்பதாக டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ள நிலையில், அதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை கனடிய அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.**

**கனடாவின் ஏற்றுமதிகள் மீது 25 வீத வரி விதிக்கப்படும் என டொனால்ட் ட்ரம்ப் அறிவித்திருந்தார்.**

**பெரும்பாலும் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் இந்த வரி விதிப்பு நடைமுறைப்படுத்தப்படும் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.**

இவ்வாறான ஒரு பின்னணியில் இந்த வரி விதிப்பு காரணமாக பாதிக் கப்படக்கூடிய தரப்புக்களுக்கு நிவா ரணங்களை வழங்கும் முனைப்புக ளில் மத்திய அரசாங்கம் ஈடுபட்டுள் ளது.

கோவிட் பெருந்தொற்று ஏற்பட்ட காலத்தில் மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணங்களுக்கு நிகரான அடிப் படையில் வர்த்தக நிறுவனங்களுக்கு நிவாரணங்களை வழங்குவது குறித்து கனடிய அரசாங்கம் ஆயத்தங்களை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப் படுகிறது.

கனடா மீது வரி விதிப்பது தொடர் பில் அமெரிக்க அரசாங்கம் அதிகாரப் பூர்வமான அறிவிப்புகள் எதனையும் இதுவரையில் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக கனடாவின் குடிவரவு கொள்கைகள் தொடர்பில் ட்ரம்ப் அதிருப்தி வெளியிட்டு இருந்தார்.

சட்டவிரோதகுடியேறிகள் கனடா ஊடாக அமெரிக்காவிற்கு பிரவேசிப்ப தாகவும் அதனை கனடா தடுத்து நிறுத்தவில்லை எனவும் குற்றம் சுமத்தி இருந்தார்.

# ஹமில்டன் பகுதியில் நூதன கொள்ளை

கனடாவின் ஹமில்டன் பகுதி யில் அண்மையில் வித்தியாசமான கொள்ளை சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

ஆறு பெண்கள் இந்த கொள்ளை சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

25 முதல் 60 வயது வரையிலான ஆறு பெண்கள் கடையொன்றுக்குள் புகுந்து பொருள்களை களவாடியுள் ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தை தடுப்பதற்கு முயற்சித்த கடையின் உரிமையா ளர் ஒருவரை பெண் ஒருவர் கடித் துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

6 பெண்கள் கடைக்குள் பிரவே சித்துள்ளனர். ஒரு பெண் கடையில் சிறு பொருள்களை கொள்வனவு செய்துள்ளார். ஏனையவர்கள் பல் வேறு பொருள்களை திருடியுள்ளனர்.

இதனை அவதானித்த கடை உரிமையாளர்கள் அந்த பெண் களை தடுக்க முயற்சித்த போது ஒரு பெண் கடை உரிமையாளரை கடித்து தப்பி சென்றுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

6 பெண்களும் வாகனம் ஒன் றில் தப்பிச் சென்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. இந்த பெண் களில் சிலர் முக்காடு அணிந் திருந்தனர் என தெரிவிக்கப்ப டுகிறது.





# கனடாவின் டொரன்டோவில் கடும் பனிப்பொழிவு நிலவும்

டொரன்டோவில் வானிலை தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடுமையான பனிப்பொழிவுடன் கூடிய வானிலை நிலவும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கடுமையான பனிப்பொழிவு காரணமாக போக்குவரத்து சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த பஸ் சேவை இடைநிறுத்தம் தொடர்பில் டொரன்டோ போக்குவரத்து சேவை சமூக ஊடகங்களில் தகவல் வெளியிட்டுள்ளது.

மறு அறிவித்தல் வரை சில பகுதிகளுக்கான போக்குவரத்து சேவை இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பயணிகளின் பாதுகாப்பினை முதன்மையாக கருத்தில் கொண்டு இவ்வாறு சேவையை இடைநிறுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காலநிலை சீர்கேடு காரணமாகவே இவ்வாறு சேவைகள் இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வாகன சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் பயணங்களை மேற்கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆல்பர்ட்டா மாகாணத்திலும் பனிப்பொழிவுக்கு தொடர்பில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.







## ஹமில்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் 3 சந்தேக நபர்களை தேடி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

அண்மையில் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றிருந்தது. சுத்தியல்களை பயன்படுத்தி நகையகத்தை உடைத்து நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் வாகனங்களின் ஊடாகவும் நடந்தும் சம்பவ இடத்தை விட்டு தப்பிச் சென்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த கொள்ளையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கு பொது மக்களின் உதவியை நாடுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த தொடர்பில் கைது செய்யப்பட்ட பதிம வயது இளைஞருக்கு எதிராக வழக்கு தொடரப்பட உள்ளது.

இந்த கொள்ளை சம்பவம் தொடர்பில் தகவல்கள் தெரிந்தால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.







# பேஸ்ட்ரியில் பாக்டீரியா தாக்கம்; கனடாவில் 69 பேர் பாதிப்பு

கனடாவில் இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வரும் பேஷ்ட்ரி வகைகளில் ‘சல்மொனெல்லா எனப்படும் பாக்டீரியாவின் தாக்கம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பேஸ்ட்ரீ வகைகளை உட்கொண்ட 69 பேர் இது நோய்வாய்பட்டுள்ள நிலையிலேயே, இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

கனடிய பொது சுகாதார முகவர் நிறுவனம் இது தொடர்பான எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இந்நிலையில், இந்த வகை பேஸ்ட்ரிகளை சந்தைகளில் இருந்து மீள பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் இது தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த செப்டம்பர் கடந்த 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் இந்த ஆண்டு ஜனவரி மாதம் வரையில் இந்த பேஸ்ட்ரி வகைகளை உட்கொண்ட 69 பேர் நோய்வாய் பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. மேலும் இவர்களில் 22 பேர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. மேலும், க்யூபிக் மாகாணத்திலேயே அதிக எண்ணிக்கை யிலானவர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கனடா மீது நாளை வரி விதிக்கப்படும்

## டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு



தொடர்பில் தாம் ஏற்கனவே குறிப்பிட்டதை சனிக்கிழமை நிறைவேற்ற இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஓவல் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மெக்ஸிகோவும் கனடாவும் வர்த்தக விவகாரத்தில் அமெரிக்காவுக்கு ஒருபோதும் நல்லது செய்ததில்லை எனவும் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அமெரிக்காவை அவர்கள் மிகவும் நியாயமற்ற முறையில் நடத்தியுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார். இதனால் நாம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம் என குறிப்பிட்டுள்ள ட்ரம்ப், அவர்களிடம் உள்ள பொருட்கள் இனி நமக்குத் தேவையில்லை என குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அமெரிக்காவிடம் தேவையான அளவுக்கு எண்ணெய் மற்றும் மரக்கட்டைகள் இருப்பதாக குறிப்பிட்டுள்ள அவர், வரி சதவிகிதம் காலத்திற்கு ஏற்றாற்போல் உயரவும் குறையவும் வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, ட்ரம்பின் வரி விதிப்பு தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள கனேடிய நிர்வாகம், எதையும் எதிர்கொள்ள தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளது.

அத்துடன், எரிசக்தி ஏற்றுமதியை ரத்து செய்யவும் சில பொருள்கள் மற்றும் வளங்கள் மீது ஏற்றுமதி வரி விதிக்கவும் வாய்ப்பிருப்பதாகவும் கனேடிய நிர்வாகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.